https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

25th JUNE 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 33

# 10 வருடங்கள் பின்னோக்கிச் சென்றுவிட்டோம்



05

## மாகாண சபைத் தேர்தல்:

# இந்தியா செல்லும் முன் வாக்குறுதி வேண்டும்



அடுத்த மாதம் ஜூலை இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை அவரது விஜயத்துக்கு முன்னதாகவே இந்தியா எதிர்பார்க்கிறது என்று அறிய முடிகிறது.

அவரது விஜயத்துக்கு முன் மாகாண சபைத் தேர்தல

02

# ரூ.18 கோடி கட்டுப்பணம் திறைசேரியிடம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களால் செலுத்தப்பட்ட 18 கோடி ரூபா கட்டுப்பணம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் காலவரையறை இன்றி ஒத்திப்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களைக்கூட ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி

02

# ஜூலை மாதம்வரை பொறுங்கள்




தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜூலை மாதம்வரை பொறுமையாக இருக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக கூட்டமைப்பின் எம்பி எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அது தொடர்பில் ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு காலஅவகாசம் விதித்துள்ளார்.

அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருப்பதாக சுமந்திரன் மேலும் கூறியுள்ளார்.

தமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி தாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை என்றும் ஜனாதிபதியுடன் பேசி தீர்வை பெற்றுக்கொள்ளலாம் என்று தாம் நம்புவதாகவும் சுமந்திரன் மேலும் கூறினார்.




# 18 நிறுவனங்களில் ரூ.95,800 கோடி நஷ்டம்

18 அரச நிறுவனங்கள் 95,800 கோடி ரூபா நஷ்டத்தை எட்டியுள்ளது என்று நிதி, பொருளாதார கொள்கை அமைச்சு வெளியிட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள், சேவை தொடர்பில் சரியான விலையை இடாமை, வீண்விரயம், அதிகள் ஊழியர்களுடன் கூடிய பலவீனமான மனித வளம், பலவீனமான முகாமைத்துவம் போன்றவையே இந்த நஷ்டத்துக்கு காரணம் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதுசுடர்
www.puthusudar.lk
2023 JUNE 25 - SUNDAY

# காலையில் சஜித்துடன் மாலையில் ரணிலுடன்

அதிகாரம்-சலுகைகளுக்கு பின்னால் ஓடுகின்ற அரசியல்வாதிகள்தான் அதிகம். மக்கள் சேவை அவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான். ஆனால்,வாக்கு சேகரிப்பதோ மக்களுக்கு சேவை செய்வோம் என்று கூறித்தான்.

அவர்களின் இலக்கு கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டும்.சொத்துக்கள் சேர்க்க வேண்டும்.பெரிய வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும்.

அரசியல் என்பதே பணம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகத் துறைதான்.அவ்வாறு பணம் சம்பாதிக்கும் மனோநிலையில் அரசியலுக்குள் வருபவர்களால் எதிர்க்கட்சியில் அமர முடியாது. அரசுடன் இணைய வேண்டும். எந்த தரப்பு ஆட்சியில் இருக்கிறதோ அந்தத் தரப்புடன் சேர வேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற வேண்டும்.பணம் சம்பாதித்தல் என்ற அவர்களின் இலக்கை அடைய வேண்டும்.

இப்போதும் அதுதான் நடக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் அரசுடன் இணைவதற்கான முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வருகின்றமை எல்லோரும் அறிந்த விடயம்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானதும் முதலில் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அவருடன் போய் இணைந்துண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றனர்.

அவர்களின் முயற்சியால் மேலும் சிலரை அந்த அரசில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராஜித சேனாரத்ன அவர்களில் ஒருவர்.அவர் வெளிப்படையாகவே அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார்.ஆனால்,அவர் விரும்புகின்ற அமைச்சு கிடைத்தால் மாத்திரம்தான் அரசுடன் இணைதல் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.

அவர் எதிர்பார்ப்பது சுகாதார அமைச்சை.கடந்த நல்லாட்சியிலும் அவர் வகித்தது அதே அமைச்சைத்தான்.இப்போதுதான் எதிர்பார்க்கிறார். அதற்காகவே காத்து கிடக்கிறார்.

ஆக,அமைச்சுக்காகத்தான் இணையப் போகிறார் என்பது நிரூபணம்.ஏனையவர்களும் இதன் நோக்கத்துக்காகவேதான் இணையவுள்ளனர்.

மொட்டு கட்சியினர் 10 அமைச்சுப் பதவிகளை கேட்டு சண்டை செய்து வருகிறார்கள். ஆனால், ஜனாதிபதி ஒரு வருடமாக அதை வழங்காமல் இழுத்தடித்து வருகிறார்.ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி அரசுடன் இணைவோருக்கு வழங்குவதற்காகவே இந்த இழுத்தடிப்பை செய்கிறார் என்று ஜனாதிபதி தரப்பில் இருந்து சொல்லப்படுகிறது.

இதன் காரணமாகத்தான் இப்போது ரணிலுக்கும் மொட்டுக்கும் இடையில் பணிப் போர் ஒன்று தலைதூக்கியுள்ளது.ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட மொட்டு கட்சியின் மாவட்டத் தலைவர்களுடனான கூட்டத்தை அவர்கள் புறக்கணித்து ஜனாதிபதி மீதுள்ள அதிருப்தியை வெளிக்காட்டினர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் பலர் காலையில் சஜித்துடனும் மாலை ரணிலுடனும் இருக்கிறார்கள் என்று கடந்த வாரம் ஹிருணிகா பிரேமசந்திரன் கூறி இருந்தார்.

இப்படி அமைச்சுப் பதவியை நோக்கியதாகவே இவர்களின் அரசியல் பயணம் அமைந்துள்ளது.இந்த அரசு அடுத்த முறை ஆட்சிக்கு வருமா இல்லையா என்றெல்லாம் தெரியாது.

இருக்கின்ற ஒரு வருடத்துக்குள் எவ்வளவு சுருட்ட முடியுமோ அவ்வளவு சுருட்டுதல்.அடுத்த வருடம் ஆட்சி மாறினால் மீண்டும் அந்த அரசுடன் போய் ஒட்டுதல். அமைச்சுப் பதவிகளை எடுத்தல்.

இப்படியான மனோநிலையில் அதிகமான அரசியல்வாதிகள் அலைந்து திரிவதுதான் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

இவர்கள் உரிய நேரத்தில் செய்ய வேண்டியதை செய்திருந்தால்-அவர்களின் கடமையை சரியாக நிறைவேற்றி இருந்தால் நாடு இந்த நிலைக்குச் சென்றிருக்காது. அவர்களின் பைகளை நிரப்ப முயற்சித்தமைதான் எல்லா பிரச்சினைக்கும் கரணம்.

இவ்வாறான அரசியல்வாதிகளை மக்கள் முதலில் அடையாளம் காண வேண்டும்.அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கான வேலையை முதலில் செய்ய வேண்டும்.இல்லாவிட்டால் மக்கள் இப்படியே தொடர்ந்து கஷ்டப்பட வேண்டியதுதான்.

# எமக்கு அமைச்சுப் பதவிகள் வேண்டாம்

தாம் அமைச்சுப் பதவிகளை கேட்கவில்லை என்றும் அந்த அமைச்சுக்களை ஐக்கிய மக்கள் சக்தி எம்பிகளுக்கு வழங்கி அரசை பலப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகிறோம் என்றும் நாமல் ராஜபக்ச எம்பி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்

நாம் மொட்டு கட்சியினர் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கூட்டத்தைப் புறக்கணித்தோம்.எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமையால்தான் இப்படி செய்தோம் என்று சிலர் கூறுகின்றனர். அது பொய்.

அந்த அழைப்பு உரிய முறைப்படி இடப்பெறவில்லை.மொட்டு கட்சி மாவாட்டத் தலைவர்களை அழைப்பதாக இருந்தால் கட்சித் தலைவர்,செயலாளரின் ஊடாகத்தான் அழைக்க வேண்டும்.அவர்களுக்குத் தெரியாமல் செய்ய முடியாது.

அந்த முறைமை இங்கு பின்பற்றப்படவில்லை.அதனால்தான் நாம் கூட்டத்தைப் புறக்கணித்தோம்.

அமைச்சுப் பதவிகள் கேட்டு நாம் கூட்டத்தைப் புறக்கணிக்கவில்லை. அமைச்சுக்கள் வேண்டாம் என்று நாம் எப்போதோ கூறிவிட்டோம்.

மொட்டு கட்சியினர் அமைச்சரவையில் இருப்பதால்தான் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரும் வருவதில்லை என்று கூறுகிறார்கள்.

நாம் அப்போதே சொல்லிவிட்டோம். எமது அமைச்சுப் பதவிகளை அவர்களுக்கு கொடுத்து அரசை பலப்படுத்துங்கள்.

நாங்கள் அதற்கு ஆதரவு வழங்குகிறோம் என்று.

ஒரு வருடமாக சொல்கிறார்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 10 பேர் வருகிறார்கள்.20 பேர் வருகிறார்கள்,40 வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால்,எதுவும் நடக்கவில்லை என்றார்.

## மாகாண சபை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

உட்பட பல நிபந்தனைகளுக்கு ரணில் உடன்பட வேண்டி வரும் என்று இந்திய தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவல் இந்திய தரப்பல் பசில் ராஜபக்சவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பசில் ராஜபக்ஸ மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை பத்ரமுள்ள காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேசியுள்ளார்.


மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளது.அது தொடர்பான நிபந்தனைக்கு அவர் இந்தியா செல்லும் முன்பே உடன்பட வேண்டி வரும்.இந்தியா இதையே எதிர்பார்க்கிறது என்றார் பசில்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை என்று கூறி வரும் அரசு இதே காரணத்தை இந்தியாவிடம் கூறி மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுகிறது.

## ரூபா. 18..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அதன் ஊடாக வேட்பு மனுக்கள் ரத்து செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.




# காலை வரமாட்டோம்: ரணிலுக்கு பசில் உறுதி





சில நாட்களுக்கு முன் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட மொட்டு கட்சியின் மாவட்டத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளின் கூட்டத்தை அக்கட்சி புறக்கணித்ததைத் தொடர்ந்து அரசுக்குள் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

மொட்டு கட்சி இனி ஜனாதிபதிக்கு பெரிதாக ஆதரவு வழங்காது என்று பேசப்பட்டது.

இந்த நிலையில்,கடந்த வாரம் அரசை பிரதிநித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

8 கட்சிகளின் தலைவர்கள் அதில் கலந்துகொண்டனர். மொட்டு கட்சி சார்பில் பசில் ராஜபக்ச கலந்துகொண்டார்.

அரசின் எந்தவொரு வேலைத்திட்டத்துக்கும் நாம் பூரண ஆதரவு வழங்குவோம்.காலை வரமாட்டோம் என்று பசில் அங்கு ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

# அரசுக்கு எதிராக 40 வழக்குகள்



அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இதுவரையும் போராடி வருகிறது என்று கூறியுள்ள அக்கட்சியின் முன்னாள் எம்பி முஜிபுர் ரஹ்மான் அது தொடர்பில் இதுவரை 40 இற்கு மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறது என்றும் சொன்னார்.

கோத்தாபய ஜனாதிபதி ஆனது முதல் இன்றுவரை மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அவர் பதவியை விட்டோடி அடுத்தவர் அவரது இடத்துக்கு வந்தபோதிலும் பெரிய மாற்றம் ஒன்றும் இடம்பெற்றுவிடவில்லை.

புதிய வறுமை 40 லட்சம் உருவாகியுள்ளது.இது மிகவும் பாரதூரமான நிலைமை.மூன்று வேளை சாப்பிட்டவர்கள் அதை இரண்டு வேளையாக மாற்றியுள்ளனர். இரண்டு வேளை உண்டவர்கள் ஒரு வேளையாக மாற்றியுள்ளனர்.

இந்த நிலைமை மோசமடையுமே தவிர பிரச்சினை தீர்வதற்கு வழியில்லை.அரசு உண்மையான பிரச்சினைகளை தீர்ப்பதை விட்டுவிட்டு தேவையற்ற வேலைகளை செய்துகொண்டிருக்கிறது.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நாம் போராடி வருகிறோம்.இதுவரை 40 இற்கு மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறோம்.

நாம் தொடர்ந்தும் மக்களின் பிரச்சிகளைத் தீர்ப்பதற்காகப் போராடுவோம்.என்றார்.

# ஜனாதிபதி அரசியல் தற்கொலை



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மொட்டு கட்சியுடன் சேர்ந்து பயணிப்பதால் அவர் அரசியல் தற்கொலை செய்வதற்கு முடிவெடுத்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி எம்பி கபீர் ஹாசிம் கூறினார்.

கபீர் ஹாசிம்,ஹர்ச டி சில்வா மற்றும் எரான் விக்ரமரத்ன ஆகியோர் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து தற்போதையை அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்தாலோசித்தனர்.

அப்போதே கபீர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டு மக்கள் இப்போது மொட்டு கட்சியை முற்றாக நிராகரித்துள்ளனர்.இந்த கட்சியால் அவர்கள் நல்ல பாடத்தைக் கற்றுள்ளனர்.இனியும் அவர்கள் பாடம் கற்பதற்குத் தயாரில்லை. அவர்கள்தான் அரசுக்கு பாடம் படிப்பிக்கப் போகிறார்கள்.

ஜனாதிபதி இதை அறியாது மொட்டு கட்சியுடன் சேர்ந்து பயணிக்கிறார். அவர் அரசியல் தற்கொலை ஒன்றுக்குத் தயாராகிறார் என்றே தெரிகிறது.இனி வரும் எந்தத் தேர்தலிலும் மக்கள் மொட்டு கட்சியை ஆதரிக்கப்போவதில்லை என்றார்.

அங்கு கருத்துக் கூறிய ஹர்ச டி சில்வா:

அரசு செய்ய வேண்டியது உடனடியாகத் தேர்தலை நடத்துவதுதான்.மக்கள் ஆணையற்ற அரசால் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. மக்கள் விரும்புகிறவர்களிடம் நாட்டின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மஹிந்தவை-கோத்தாவை மக்கள் போராட்டத்தின் மூலம் விரட்டியதில் இருந்து இந்த அரசுக்கான மக்கள் ஆணை முடிந்துவிட்டது.

ஜனாதிபதி சிறந்த ஜனநாயகவாதி என்றால் அவர் புதிய மக்கள் ஆணைக்கு வழிவிட வேண்டும்.இல்லாவிட்டால் நாடு மேலும் மேலும் சீரழிந்துகொண்டே செல்லும். மக்கள் எதிர்ப்பு அதிகரித்துக்கொண்டே செல்லும்.இறுதியில் மொட்டு என்ற ஒரு கட்சி காணாமல் போய்விடும்.என்றார்.

எரான் விக்ரமரத்ன கூறுகையில்,


மக்களின் ஜனநாயகத்தை நாசமாக்கி சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போட்டு நாட்டை நிர்வகிக்க முடியுமா?

அரசு முதலில் ஜனநாயக விரோத செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்த வேண்டும்.மக்களின் உரிமைகளில் கை வைக்கக்கூடாது.

ஜனநாயகம் என்பது இந்த நாடு சுழலுவதற்கான அச்சாணி.அதைப் பிடுங்கி எறிந்துவிட்டு நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்றார்.

# மொட்டு கட்சியின் புறக்கணிப்பு:

## ஜனாதிபதி விளக்கம்



மொட்டு கட்சியின் மாவாட்டத் தலைவர்கள் ஜனாதிபதி கூட்டத்தை புறக்கணித்தமை கடந்த வாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மொட்டு கட்சிக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியுள்ளது என்றும் ஜனாதிபதிக்கான ஆதரவை மொட்டு கட்சி நீக்கிக்கொள்ளப்போகிறது என்றும் பேசப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி இவ்வாறு கூறினார்:

“ மொட்டுக்கட்சியின் மாவட்டத் தலைவர்கள் என்னைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.அதற்கான வாய்ப்பை நான் ஏற்படுத்திக் கொடுத்தேன்.சிலர் வந்தார்கள். சிலர் வரவில்லை.சிலரால் வரமுடியாமல் உள்ளது என்று முன்கூட்டியே அறியத் தந்தார்கள்.இதற்கு அப்பால் எனக்கு எதுவும் தெரியாது .“ என்றார்.

ஆனால்,மொட்டு கட்சியின் கூட்டங்களை ஜனாதிபதியால் ஏற்பாடு செய்ய முடியாது.அதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை.மொட்டு கட்சி தலைவர்களே செய்ய வேண்டும். என்று கூறியே மொட்டின் மாவாட்டத் தலைவர்கள் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தமை குறிப்பிடத்தக்கது.

அதிலும்,முக்கியமாக,மஹிந்த ராஜபக்ச,பசில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை.




# பிரபாவின் இறுதி நிமிடம்...!!

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

## மக்களுக்குள் இருந்து இராணுவத்தை சுட்ட புலிகள்:

## புலிகளை காட்டிக்கொடுத்த மக்கள்

மறுநாள் காலை....

இணைகிறார் இன்னொரு ஞெனிெநச வீரர்.அதே கமாண்டோ படையில் இருந்து...

அப்போது ஒரு காட்சி.சற்றுத் தள்ளி.

வருகிறார் ஒருவர் சைக்கிளில்.கலன் ஒன்றைக் கட்டிக்கொண்டு...

படையினர் அலேர்ட்...

வந்தவன் தொடுக்கிறான் தாக்குதலை. முறியடிக்கிறார்கள் படையினர்.

ஆம்...அவன் புலி.

அப்படியே நகருகிறார்கள்.

எதிரே சிறு குன்று.தாண்டியதும்.தெரிகிறது ஒரு காட்சி.

அது மக்கள் நிறைந்து நிற்கும் காட்சி. மக்கள் வெள்ளம்.

பிற்பகல் 3 மணி...

இவர்கள் நினைக்கவில்லை இவ்வளவு மக்கள் நிற்பார்கள் என்று...

பங்கர்கள் எவையுமில்லை படையினர் நிற்குமிடத்தில்.பனை மரங்கள்தான் அங்கு.

அவற்றை வைத்தே அமைக்கிறார்கள் தற்காலிக பாதுகாப்பு அரணை.

வீதியின் இடது பக்கம் மூன்று மரங்கள். வலது பக்கம் மூன்று மரங்கள்.

இதுதான் பாதுகாப்பு அரண்.

ஒன்றுக்குள் நால்வர்.அடுத்ததற்குள் நால்வர்.

படையினரைக் கண்டுவிட்டார்கள் மக்கள். ஓடி வருகிறார்கள் படையினரை நோக்கி...

என்ன செய்வது...? எப்படிச் சமாளிப்பது...? அவர்களுடன் சேர்ந்து புலிகளும் வரக்கூடுமே...

படையினரின் பின்னால் லெப்டினன் கேணல் வசந்த ஹேரத்.கட்டளைத் தளபதி.

அவரிடம் தகவலை எத்திவைக்கிறார் ஜயரத்ன.

மக்களை உள்ளே எடுக்குமாறு உத்தரவு. அவரிடம் இருந்து...

அப்படியே செய்கிறார் கள்....ஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸ

சில மக்களுக்குப் பயம்.இராணுவம் சுடுவார்கள் என்று.அதனால் அப்படியே நிற்கிறார்கள் சிலர்.

ஆனால், கூப்பிடுகிறார்கள் படையினர்.

கை அசைத்து...தமிழில் பேசி.

நன்கு தமிழ் தெரிந்த சிப்பாய் ஒருவர் அங்கு.

அதன் பின்தான் நம்பிக்கை அந்த மக்களுக்கு.வருகிறார்கள் படையினரிடம்...

ஆனால்,சண்டை நிற்கவில்லை.

சுட்டுக்கொண்டே இருக்கிறார்கள் புலிகள்.

மக்களை உள்ளே எடுக்கிறார்கள் படையினர்.அவர்களுடன் சண்டையிட்டுக்கொண்டே.

நிரம்பி வழிகிறது மக்கள் கூட்டம்.

ஆனால்,ஆபத்து அதிகம்.புலிகள் நிற்கக்கூடும் அதற்குள்.

நினைத்ததுபோலவே நடக்கிறது.

சிங்களம் தெரிந்த சிவிலியன் ஒருவர் அக்கூட்டத்துக்குள்...

சத்தம் வைக்கிறார்.

“சேர்..இதற்குள் புலிகள் நிற்கிறானுகள். சுடுறதுக்கு ரெடியாகுறானுகள்...“

சொல்லி வாய் மூடவில்லை.வருகின்றன வெடில்கள்.அதற்குள் இருந்து...

பெரிய துப்பாக்கிகளால் அல்ல.பிஸ்டல்ஸ்.

பிஸ்டல் வெடில்கள் படும் தூரத்தில்தான் படையினர்.வீதி ஓரத்தில்...

மக்கள் நடுவில்.வீதியில்..

அதற்குள் இருந்துதான் வெடில்கள்.

பதில் தாக்குதல் நடத்த முடியா நிலை. புலிகள் மக்களோடு மக்களாக...

வீதியின் அந்தப் பக்கம் இருக்கும் படையினர் தெரிவதில்லை இந்தப் பக்கம் இருக்கும் லெப்டினன் ஜயரத்னவுக்கு... வீதியில் மக்கள் நிறைந்து நிற்பதால்...

அவர்களுக்கு என்ன நடந்தாலும் தெரியாது.

இதனால் இடைவெளியை ஏற்படுத்துகிறார்கள் மக்களிடையே.. . வீதியின்.இரு பக்கங்களிலுமுள்ள படையினர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளும் வகையில்...

மக்களை கவனிப்பதில் லெப்டினன் ஜயரத்ன தீவிரம்.

ஒரே இடத்தில் நிற்கிறார்.தன்னை மறந்து.. பாதுகாப்பையும் மறந்து..

நீண்ட நேரமாக அவ்விடத்தில்...

இதை அவதானிக்கிறார் கோப்ரல் நிசங்க...செட் ஒப்பரேட்டர்.

அலெர்ட் பண்ணுகிறார் ஜயரத்னவை...

நீண்ட நேரம் நிற்க வேண்டாம். புலிகள் உங்களை இலகுவில் இலக்கு வைப்பார்கள்...“

அப்போதுதான் உணர்கிறார் ஜயரத்ன. தன் பாதுகாப்பை மறந்து நிற்பதை...

உடனே குந்துகிறார் அந்த இடத்தில்...

அப்போது நின்றுகொண்டு இருக்கிறார் நிசங்க..

நிசங்க நிற்பதும் பாதுகாப்பல்ல.

அவரின் கையைப் பிடித்து கீழே இழுக்கிறார் லெப்டினன்.அதற்குள் சரி.

ஆம்...

கூட்டத்துக்குள் இருந்து வருகின்றன வெடிகள்.நிசங்கவின் நெஞ்சிலும் காலிலும்...

பட்டுவிட்டன குனிவதற்கு முன்.

தன் தளபதிக்கு வந்த புல்லட்கள்.தன் மார்பில் வாங்கிக்கொண்டார் நிசங்க...

ஆயுள் கெட்டி.மரணிக்கவில்லை. காயம்தான்.

பரபரப்பாகிறது அந்த இடம்.இந்தச் சம்பவத்தோடு...

மேலும் படையினரை அழைக்கிறார்கள் உதவிக்கு...

அந்த மக்கள் கூட்டத்துக்குள் இருவர். அவர்கள் கடற்படையினர்.புலிகளின் சிறையில் இருந்தவர்கள்.8 வருடங்களுக்கு முன் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.

இறுதி நேரத்தில் திறந்து விடுகிறார்கள் புலிகள்.வருகிறார்கள் மக்களோடு மக்களாக...

மக்களுக்கும் தெரியாது அவர்கள் கடற்படையினர் என்று.

இவர்களும் காட்டிக்கொள்ளவில்லை. ஆபத்து வரும் என்பதால்...

லெப்டினன் ஜயரத்னவிடம் செல்கிறார்கள் இருவரும்.கூறுகிறார்கள் விடயத்தை...

பின்னுக்கு அனுப்புகிறார் அவர்களை. அங்குள்ள படையினரிடம்...

அடுத்து...?


சந்திப்போம் தொடர்-07 இல்...



கூட்டத்துக்குள் இருந்து வருகின்றன வெடிகள்.
நிசங்கவின் நெஞ்சிலும் காலிலும்...
பட்டுவிட்டன குனிவதற்கு முன்.
தன் தளபதிக்கு வந்த புல்லட்கள்.தன் மார்பில் வாங்கிக்கொண்டார் நிசங்க...
ஆயுள் கெட்டி.மரணிக்கவில்லை.காயம்தான்.
பரபரப்பாகிறது அந்த இடம்.இந்தச் சம்பவத்தோடு...
மேலும் படையினரை அழைக்கிறார்கள் உதவிக்கு...



# 10 வருடங்கள் பின்னோக்கிச் சென்றுவிட்டோம்



**IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குச் சென்ற எவருக்கும் அதுபற்றி எதுவும் தெரியாது. IMF கூறிய எல்லாவற்றுக்கும் தலையசைத்துவிட்டு வந்துள்ளார்கள். கோத்தாவுடன் இருக்கும்போது ஐஆகு இடம் செல்வதுபற்றி ஒரு நிலைப்பாட்டில் இருந்தார்கள். ரணில் வந்ததும் வேறொரு நிலைப்பாட்டில் உள்ளார்கள். உண்மையில் இவர்களுக்கு எதுவுமே தெரியாது. எல்லாவற்றுக்கும் கை உயர்த்துகிறார்கள்.**

- அரச நிதி குழுவின் தலைவர் பதவி உங்களுக்கு கிடைத்தது கடும் கஷ்டப்பட்டுதான்.ஏன் அரசு அதை வழங்குவதில் இழுத்தடித்தது?
- பொருளாதாரரீதியில் நாடு இப்போது எந்த இடத்தில் உள்ளது ?
- டொலருக்கான பெறுமதி குறைந்தது எப்படி ?
- நேர் பொருளாதாரத்துக்கு இந்த வருடம் செல்ல முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளாரே...?
- நாட்டில் வறுமை அதிகரித்துள்ளதாக பல அறிக்கைகள் கூறுகின்றன.இதுபற்றி உங்கள் கருத்து ?



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி டாக்டர் ஹர்ச டி சில்வா.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி : அரச நிதி குழுவின் தலைவர் பதவி உங்களுக்கு கிடைத்தது கடும் கஷ்டப்பட்டுதான்.ஏன் அரசு அதை வழங்குவதில் இழுத்தடித்து?

பதில் : இந்த நிதி குழு கோப் ,கோபா போன்ற குழுக்களில் இருந்து வேறுபட்டது. அந்த குழுக்கள் கடந்த காலங்களில் நிதி தொடர்பில் நடந்தவற்றை ஆராயும். ஆனால்,நான் இப்போது தலைமைத்துவம் வகிக்கும் இந்தக் குழு எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கின்ற நிதி தொடர்பான செயற்பாடுகளை ஆராயும்.

அடுத்தது இதன் உள்ளடக்கமும் கடும் விரிவானது.

2020 இல் நாடாளுமன்றம் கூடியதும் எதிர்க்கட்சி ஒருவரை இதற்கு தலைவராக நியமிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டபோதும் அரசு நிலையியல் கட்டளையை மீறி அவர்களின் ஒருவரை நியமித்தது.நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

வங்குரோத்து நிலையை அடையும்வரை நாம் அரசின் பொருளாதார திட்டத்தைக் கடுமையாக விமர்சித்தோம்.சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று முதலில் யோசனை கூறியது நாம்தான்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததும் இப்போது என்னைத் தலைவராக நியமிப்பதற்கு அவர்கள் தீர்மானித்து தலைவராக்கினர்.

பிறகு ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திப்போட்டார்.இதனால் எல்லா குழுக்களும் தானாகக் கலைந்தன.

மீண்டும் நாடாளுமன்றம் கூடியதும் அந்தக் குழுவிற்குத் தலைவராக அனைத்து எதிர்க்கட்சிகளும் எனது பெயரைத்தான் பிரேரித்தன.

ஆனால்,அது முடியாது என்று அரசு நின்றது. சபாநாயகரால் தீர்க்கக்கூடிய விடயம் இது.

கேள்வி : அப்படியென்றால்,இப்போது ஏன் வழங்கினார்கள் ?

பதில் : அரசுக்கு எல்லா பக்கத்திலும் இருந்து அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது எனக்கே இதன் தலைமைத்துவப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று.

நாட்டுக்குள் இருந்து மட்டுமல்ல நாட்டுக்கு வெளியில் இருந்தும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.அதன்பின்பே எனக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது.

இந்தப் பதவி ஒரு பெரிய விடயம் அல்ல.இதற்கு சம்பளமோ,வாகனமோ,அலுவலகமோ கிடையாது.சலுகைகள் எவையும் இல்லை.

கேள்வி : கடைசியில் ஜனாதிபதி தலையிட்டுத்தான் இந்தப் பதவி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.உங்களை அரசு பக்கம் சார்பாக செயற்பட வைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது என்று தோனுகிறதே?

பதில் : யாராவது அப்படி நினைத்தால் அது நியாயம்தான்.பார்ப்பவர்களுக்கு அப்படித்தானே தெரிகிறது.

இந்தப் பிரச்சினை எழுந்தபோது இதுபற்றிப் பேசுவதற்காக ஜனாதிபதி என்னை அழைத்திருந்தார்.நானும் கபீர் ஹாசிமும் ஜனாதிபதியிடம் சென்றிருந்தேன்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவையும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவையும் அழைத்திருந்தார்.என்ன பிரச்சினை என்று வினவினார்.

ஹர்சவுக்கு இது தொடர்பில் தெளிவு இருப்பதால் அவரிடமே அதை ஒப்படைப்போம் என்று ஜனாதிபதி கூறினார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எனது உதவியை எதிர்பார்ப்பதாக ரணில் கூறினார்.

அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அப்பால் சென்று இந்த நாட்டுக்காக செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன.

அமைச்சரவையில் அமர்ந்து அதைச் செய்ய வேண்டிய தேவை எனக்கு இல்லை.

தேர்தலை நடத்தி அந்தத் தேர்தலின் ஊடாக கிடைக்கும் மக்கள் ஆணையை அடிப்படையாக வைத்துத்தான் அடுத்த அரசு உருவாக வேண்டும்.

மக்கள் இப்போது எங்களுக்கு வாக்களித்திருப்பது அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக.அமைச்சுப் பதவிகளை பெறுவதற்காக அல்ல.

கேள்வி : பொருளாதாரரீதியில் நாடு இப்போது எந்த இடத்தில் உள்ளது ?

பதில் : இந்த இடத்தில் ஒரு விடயம் செய்ய வேண்டி இருந்தது.ராஜபக்சக்கள் அதைச் செய்யவில்லை.

அதுதான் வட்டி வீதத்தை குறைந்த வீதத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு இருந்தது.

நந்தலால் வீரசிங்க மத்திய வங்கி ஆளுநராக வந்து சில நாட்களில் வட்டியை 8 வீதத்தால் அதிகரித்தார்.இரண்டு மடங்கிற்கும் அதிகமான அதிகரிப்பு.இதற்கு முன் ஒருபோதும் இப்படி நடந்ததில்லை.வட்டி வீதம் இந்தளவு அதிகரித்ததில்லை.

இதனால் பொருளாதாரத்துக்கு இருந்த கிராக்கி குறைந்தது.

இது அதிகமானவர்களுக்கு புரிவதில்லை. பொருளாதார அறிவுடன் பார்க்கும்போது வட்டி வீதத்தைத்தான் முதலில் குறைத்திருக்க வேண்டும்.

இதனால் சந்தையில் இருந்த நிதி வங்கிகளுக்குச் சென்றது.வர்த்தகத்தில் முதலீடு செய்வதைவிட வங்கியில் வைப்பில் வைத்தால் வட்டி அதிகம் கிடைக்கும் என்பதால் இப்படி செய்தார்கள்.

தொழில்சாலைகள் மூடப்பட்டன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழிலை இழந்தனர்.கிராக்கி குறைந்தது.இதனால் பணவீக்கம் குறைந்தது.

மத்திய வங்கி எடுத்த பிழையான தீர்மானத்தான் இந்த நிலைக்குக் காரணம்.இதனால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுகின்ற வேலையைத்தான் அரசு இப்போது செய்ய வேண்டும்.

கேள்வி : டொலருக்கான பெறுமதி குறைந்தது எப்படி ?

பதில் : இறக்குமதிக்கான தடை இருப்பதால் டொலரின் கிராக்கி இறங்கியுள்ளது. அடுத்தது வட்டி வீதம் அதிகமாக இருப்பதால் வெளிநாடுகளில் டொலர் சம்பாதிப்பவர்கள் டொலரை இங்கு வந்து வங்கிகளில் முதலீடு செய்கின்றனர்.

அவர்கள் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்தால் கிடைக்கும் இலாபத்தைவிட இலங்கை வங்கிகளில் முதலீடு செய்தால் இலாபம் அதிகம்.

இதனால் அதிகமான டொலர்கள் இலங்கைக்கு வரத் தொடங்கியுள்ளன.

ஆனால்,இது நிரந்தமல்ல.இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டால் டொலருக்கான கிராக்கி கூடி டொலரின் பெறுமதி அதிகரிக்கும்.

கேள்வி : நேர் பொருளாதாரத்துக்கு இந்த வருடம் செல்ல முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளாரே...?

பதில் : இந்த வருடம் அது கஷ்டம்.நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும் என்றால் நிறைய விடயங்களை நாம் செய்ய வேண்டியுள்ளது.

ஒழுக்கத்தோடு நாட்டை நிர்வாகம் செய்ய வேண்டும்.ஊழல்,மோசடிகளை ஒழிக்க வேண்டும்.வருமானம் வரும் வழிகளை ஏற்படுத்த வேண்டும்.சர்வதேசத்துக்கு நாட்டை திறக்க வேண்டும்.

இப்படி பல முக்கியமான விடயங்களை செய்யாவிட்டால் நாட்டை ஒருபோதும் முன்னேற்றவே முடியாது.

கேள்வி : நாட்டில் வறுமை அதிகரித்துள்ளதாக பல அறிக்கைகள் கூறுகின்றன.இதுபற்றி உங்கள் கருத்து ?

பதில் : 2019 இல் இருந்து 2023வரை புதிய ஏழைகள் 40 லட்சம் பேர் உருவாகியுள்ளனர் என்று கூறுகின்றன டுநுயுசுே யுளுஐயு வின் அறிக்கை.இது கின்னஸ் சாதனை என்றே சொல்ல வேண்டும்.

இப்படி குறுகிய காலத்துக்குள் வறுமையை அதிகரித்த நாடு உலகில் எங்குமே இல்லை.

10 வருடங்கள் நாம் பின்னோக்கிச் சென்றுவிட்டோம்.இப்படி இருக்கும்போது எப்படி நாம் முன்னேறுவது

தாய்லாந்த்,சீனா,தென்கொரியா எல்லாம் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்துத்தான் முன்னேறின.அப்படியான நாம் இழந்துகொண்டு வருகிறோம்.

தொழில் நுட்பத்தின் ஊடாக எமக்கு தொழில் வாய்ப்புகள் வருவதில்லை.இது துரதிஷ்டமான ஒன்று.

இருக்கின்ற தொழில் வாய்ப்புகளைக்கூட 14 லட்சத்தில் இருந்து 8 லட்சமாக குறைப்பதற்கு பார்க்கிறார்கள்.

# இராஜாங்க அமைச்சர் மாறுவேடத்தில் பாத யாத்திரை

பாதுகாப்பது இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மாறுவேடம் அணிந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை சென்றுள்ளார்.

சட்டையும் அரை கால் சட்டையும் அணிந்து முகத்தை மூடி இரவு 3 மணிக்கு அவர் இந்த பாத யாத்திரையைத் தொடங்கியுள்ளார்.

அவர் யாரென்று தெரிந்தால் சிக்கலாகிவிடும் என்பதால் இவ்வாறு சென்றுள்ளார்.

இருந்தாலும் அவர் தங்குமிடத்தில் பாதுகாப்பான கூடாரம் ஒன்றை பாதுகாப்பு அதிகாரிகள் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர்.





துப்பறிவாளன்



# இசை நிகழ்ச்சி பார்க்கச் சென்ற பிரசண்ண

கடந்த வாரம் காலியில் இடம் பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்ப்பதற்குச் சென்றார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

அவரை அடையாளம் கண்டுகொண்ட ஒருவர் "" சேர்..என்ன இந்தப் பக்கம் "" என்று வினவினார்.

"சான்ஸ் ஒன்று கிடச்சுச்சு இசை நிகழ்ச்சி பார்க்க.அதான் வந்த.." என்றார்.

"உங்கள மாதிரி ஆட்கள் இதுக்கெல்லாம் வரமாட்டீங்களே"" என்றார் இன்னொருவர்.

"மத்தவங்கள பத்தி எனக்கு தெரியா.இசை நிகழ்ச்சி பார்க்க,படம் பாக்க.. எனக்கு சான்ஸ் கிடச்சா உடமாட்டேன்."என்றார்.

இன்னொருவர் அவரை நடனம் ஆடுவதற்கு அழைத்தார்.

"ஐயோ என்னால எழாத விஷயம் டான்ஸ் ஆடுறதும்,பாட்டு படிக்கிறதும்..நீங்க,ஆடுங்க. நான் கை தட்டி உங்களுக்கு சப்போர்ட் ஒண்டு தாறன்." என்றார்.

இப்படியே பேசி மிகவும் சந்தோசமாக நிகழ்ச்சியை பார்த்துவிட்டு கொழும்பு திரும்பினார் அமைச்சர்.





# ரணிலுக்கு இந்திய தொழிலதிபரின் திருமண அழைப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜூலை மாதம் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அதற்கு அடுத்த மாதம் ஒகஸ்ட் மாதமும் இந்தியா செல்லவுள்ளார்.

அது திருமணம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக.

இந்தியாவின் மிகப் பிரபல்யமான பெரிய தொழிலதிபரான பிரகாஷ் நாயரின் மகளின் திருமணம்தான் அது.


அது அரச திருமணம் என்றே சொல்ல வேண்டும்.பல நாடுகளின் அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பாரதிய ஜனதா கட்சியுடனும் பிரதமர் மோடியுடனும் மிக நெருக்கமான பிரகாஷ் நாயர் கோத்தாவின் ஆட்சியில் இலங்கை அரசியல்வாதிகளுடன் குறிப்பாக,ராஜபக்ச குடும்பத்துடன் நற்பை ஏற்படுத்திக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வந்த ரணிலுடனும் நற்பாகினார். பல தடவைகள் இலங்கைக்கு வந்து ரணிலை சந்தித்துவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த திருமணத்துக்காக கொச்சினில் உள்ள ஹோட்டல் ஒன்று இரண்டு நாட்களுக்கு முழுவதமாக புக் செய்யப்பட்டுள்ளது.

ரணிலை மட்டுமன்றி கோத்தா, மஹிந்த, பசில் மற்றும் பிரதமர் தினேஷ் ஆகியோரையும் அழைத்துள்ளார்.



# பெட்டி கடையில் சாப்பிட்ட அமைச்சர்

கொழும்புக்கு வரும் வழியில் பிரசன்னவுக்கு கடும் பசி.

சாரதியிடம் சொன்னார். பசிக்கிறது ஏதாவது ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு போவோம் என்று.

""சேர்..காலி கோட்டை பகுதியில் இருக்குற ஹோட்டல் ஒண்டுக்கு வாகனத்த உடயா ?"" என்று கேட்டார் சாரதி.

""பைத்தியமா..பெட்டி கடை ஒண்ட பாத்து நிப்பாட்டுங்க. அப்பம் சாப்பிட்டு..நல்ல பிளேன் டியும் குடிச்சிட்டு போவம்"" என்றார் அமைச்சர்.

அவ்வாறே செய்தனர்.

# ஜனாதிபதி கவலை

பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி இரு நிதி இராஜாங்க அமைச்சர்களைத் தவிர அரசில் உள்ள வேறு எவரும் பேசுவதில்லையாம்.இதனால் ஜனாதிபதி கடும் கவலையடைந்துள்ளாராம்.

இதனால் அரசின் முக்கியஸ்தர்கள் பலரை அழைத்து இதுபற்றி ஜனாதிபதி பேசியுள்ளார்.

எல்லோரும் பிரச்சினைகள் பற்றியே பேசுகிறார்கள்.அந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியோ தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் பற்றியோ பேசுவதில்லை.

இன்னும் சில மாதங்களில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்களிடம் உண்மையைக் கூறாமல் இருந்தால் எப்படி தேர்தலை எதிர்கொள்வது என்று ஜனாதிபதி அவர்களிடம் கூறியுள்ளார்.

அரசின் அபிவிருத்திகள் தொடர்பில் நான்தான் பேச வேண்டியுள்ளது என்று மேலும் கவலையுடன் பேசி இருக்கிறார் ஜனாதிபதி.

# இரு பக்கமும் வாய்ப்பூட்டு

ஜனாதிபதியுடனான மொட்டு கட்சியின் சந்திப்பை அவர்கள் புறக்கணித்தார்கள் அல்லவா.அதன் பின் ஐக்கிய தேசிய கட்சியும் மொட்டு கட்சியும் ஒருவரை திட்டத் தொடங்கின.

அரசில் இருக்கும் இரு தரப்பும் இப்படி மோதிக்கொள்வது சரி இல்லை என்பதை உணர்ந்த ஜனாதிபதி இந்த விவகாரத்தை பசில் ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்,.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின்



கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

மொட்டு கட்சியின் சார்பில் பசில் ராஜபக்சவும் மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசமும் கலந்துகொண்டனர்.

# அரசியலில் இதெல்லாம் சகசமப்பா...



- சின்னத்தம்பி குருபரன் -

மேலை நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயகம் பெரும்பாலும் சுத்தமாகவும் நாட்டு மக்கள் மீது நம்பிக்கையும் பொறுப்பும் கடப்பாடும் விசுவாசமும் கொண்டதாகவும் காணப்படுகிறது. அங்கு மக்களை மக்களால் ஆளுகின்ற ஜனநாயகப் பண்புகள், சித்தாந்தங்கள் தெளிவாகப் பின்பற்றப்படுகின்றன.

தவறு ஒன்று ஏற்படுவதற்குத் தாம் காரணமாக இருந்தாலே பெரும்பாலானோர் பதவியில் இருந்து விலகிச் சென்றுவிடுவார்கள். நமது நாட்டில் தவறு செய்வதற்கென்றே பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகள் வருகின்றார்கள். பல ஊழல் மோசடிகளில் ஈடுபட்டோர், அடிதடி, கொலை, அராசகம், ரௌடிசம், பொய், புரட்டு, ஏமாற்றுத்தனம் ஆகியவற்றின் மொத்த உருவமாகச் சிலர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி வருகின்றனர்.

இத்தகையவர்களிடம் ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி, மக்கள் முன்னேற்றம், நாட்டின் அபிவிருத்தி, சமூக நலன் ஆகியவற்றை எதிர்பார்க்க முடியாது. இத்தகையவர்களை ஆட்சியாளர்களாகக் கொண்ட நாட்டில் தூய்மையான ஜனநாயகத்தைக் காணமுடியாது.

உழைக்க வேண்டும், தான் இறக்கும்வரை அரசியலில் இருக்க வேண்டும், தனக்குப் பின் தனது வாரிசுகளைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டும், சொத்து, செல்வாக்கு, பதவி, அதிகாரம் ஆகியன தமக்கக் கிடக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுபவர்களிடம் நல்ல பண்புகளை எதிர்பார்க்க முடியாது.

ஜனநாயக நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி ஒருவர் மக்களாட்சியின் பண்புகளை ஏற்றுக் கொண்டு, நாட்டு முன்னேற்றம், மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு, ஒற்றுமை, சகவாழ்வு, புரிந்துணர்வு, இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேணல் ஆகியவற்றைக் கொள்கையாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தமக்கு வாக்களித்த மக்களின்மீது அக்கறை கொண்டு அடிக்கடி மக்களைத் தரிசித்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒருவராகவும் இருத்தல் லேண்டும். அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை முன்னெடுக்க் கூடியவராகவும், தமது பிரதேச வளங்களை இனங்கண்டு, அவற்றைக் கொண்டு நாட்டின் தேசிய வருமானத்தில் பங்களிப்புச் செய்யக்கூடிய திட்டங்களை முன்னெடுக்கத் தன்னாலான பங்களிப்பை வழங்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

பொய், புரட்டு, ஊழல், மோசடி ஆகியவற்றில் இருந்து விடுபட்ட ஒருவராகவும் இருப்பது சிறந்தது. தமது மக்களின் பிரச்சினைகள், அவர்களின் நல்வாழ்வு, வாழ்க்கைத் தரம் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

இலங்கையில் சிலரைத் தவிர செம்மையான, நேர்மையான அரசியல்வாதிகளைக் காணமுடியாது. இத்தகையவரகளிடம் பொய், புரட்டு, பொய்யான வாக்குறுதி அளித்தல், நெரத்துக்கு நேரம் குணம் மாறுதல், உறவினர்கள் நண்பர்களுக்கு முக்கியத்துவமளித்தல் வாக்கு மாறுதல் ஆகிய பல குணாம்சங்களைக் கொண்டவர்களாக மக்களால் இனம் காணப்படுகின்றனர்.

பலரிடம் போதுமான கல்வி அறிவு, அரசியல் அனுபவம், நாட்டு நடப்புகள், பொருளாதாரம், அபிவிருத்தி தொடர்பான அறிவு, அனுபவம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அறிக்கை விடல், உப்புச் சப்பற்ற வாக்குறுதியளித்தல், எந்த மேடையில் எதைப் பேச வேண்டும் எனத் தெரியாது முழங்குதல். ஒரு சிலர் மேடை அறிந்து, சந்தர்ப்பம் அறிந்து பேசுவர். பலர் அவ்வாறல்ல. சிலருக்கு மேடை கிடைத்தால் போதும் தமது வீரதீர சாகசங்களை முழங்கித் தள்ளி விடுவார்கள்.

இவர்களை அழைத்த அழைப்பாளர்கள் ஏன் இவர்களை அழைத்தோம் எனத் திண்டாடிக் கொண்டிருப்பார்கள். இவர்களை அழைத்தவர்கள் சிலர் அவருடைய முழக்கத்தினால் இன்னுமொரு அரச சார்பு அரசியல்வாதியினால் தண்டிக்கப்பட்டும் இருக்கின்றனர். ஏன் இப்படி எனக் கேட்டால் "இதுதானே எங்கள் தொழில். இதெல்லாம் அரசியலில் சகசமப்பா" எனக் கூறச் சமாளித்து விடுவார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல சிறப்புரிமைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள்ளே எந்த உறுப்பினர்களையும் எவ்வாறும் திட்டித் தீர்க்கலாம்.

அது தொடர்பாக எத்தகைய சட்ட நடவடிக்கையும் திட்டியவருக்கு எதிராக மேற்கொள்ள முடியாது. இந்தச் சிறப்புரிமையைப் பயன்படுத்தியே பாராளுமன்றத்தில் ஆக்ரோசமாகத் திட்டித் தீர்க்கின்றனர்.

இந்த முழக்கத்தையும் அவரின் காட்டசாட்டமான ஆவேசத்தையும் பார்த்த மக்கள் ஆஹா ஓகோ என்று உறுப்பினரைப் புகழ்ந்து தள்ளுவார்கள். அவர்களோ சிற்றுண்டிச் சாலையில் தோழில் கைபோட்டுக் கொண்டு நன்பர்களாகத் தேநீர் அருந்துவார்கள்.

இந்த விடயம் பொது மக்கள் பலருக்குத் தெரியாது. இதுதான் மக்களின் பலவீனம். இதைத்தான் உறுப்பினர்களும் விரும்புகின்றனர். பாராளுமன்றத்தில் ஹண்சார்ட் அறிக்கையில் ஒரு உறுப்பினர் பேசிய பேச்சைப் பதிவு செய்வதற்குச் சில வரையறைகள் இருக்கின்றன. குறித்த உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைத் திட்டித் தீர்த்த விடயம் அந்த வரையறைக்கு உட்பட்டே பதிவிடப்படும்.

மக்களுக்குக் காட்டுவதற்காக இந்தச் சிறப்புரிமையைப் பயன்படுத்தியே காட்டசாட்டமாகப் பேசி வருகின்றனர். இதிலும் இன்னும் சில உறுப்பினர்கள் வாய் திக்காமலும் இருப்பார்கள். இவ்விடயம் தெரிந்த ஒருவர் உறுப்பினரிடம் கேட்டால் இதெல்லாம் அரசியலில் சகசமப்பா என்பது போல் சாட்டுப் போக்குக் கூறிச் சென்றுவிடுவார்கள்.



## அரசியல்வாதிகளின் மனநிலையில் மாற்றம் வருமா?

அமைச்சையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ ஆவேசமாகத் திட்டிய பின்னர் பின் கதவால் வெளியில் வந்து அவர்களிடம் இருந்து சாதிக்க வேண்டியதைச் சாதித்துக் கொள்வார்கள். அதிலும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிப் பிரதிநிதிகள் பலரிடம் இதையெல்லாம் சொல்லவே தேவை இல்லை.

அவர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்பச் சாவகாசமாக நடந்து கொள்வார்கள். 2015 - 2019 இறுதிவரை இருந்த நல்லாட்சி அரசாங்கத்தக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு, எதிர்க் கட்சியாகவும் இருந்து அரசின் சகல வாய்ப்புக்கள், வரப்பிரசாதங்கள், சலுகைகளையும் பெற்றுக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

இந்த வேளையில் இருந்த சாதகமான சூழலைப் பயன்படுத்திப் புரையோடிப் போய் இருந்த பல பிரச்சினைகளை அரசோடு பேசித் தீர்த்திருக்கலாம். மக்களுக்குப் பூச்சுத்திக் காட்டாப்புக் காட்டிக் கொண்டு, அரசோடு பேசி வருகிறோம்.

அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன்பட்டு இருக்கிறார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும என்பதுபோல அடுத்த தைப்பொங்கலுக்குள் தீர்வு கிடைக்கும், சித்திரைப் புது வருடத்துக்கு முதல் தீர்வு கிடைக்கும்.

தீபாவளிக்கு முன்னர் கிடைக்கும் எனக் கூறிக்கொண்டு நான்கு வருடங்களை வெற்றிகரமாகக் கடத்தி இருந்தார்கள். இப்போதும் ரனில் விக்கிரமசிங்காவோடு சேர்ந்து இதெல்லாம் அரசியலில் சகசம் என்பது போல் அதையே செய்து கொண்டிருக்கின்றார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா, தற்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா இருவரும் ஒன்றைச் செய்வதற்கு முன்னால் பலமுறை யோசித்துப் பல ஏற்பாடுகளையும் செய்த பின்னரே செயற்பாட்டில் இறங்குவார்கள். 'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது' போல் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருக்கும் போது மறுபக்கம் அதனைக் குழப்புவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருப்பார்கள்.

இந்த விடயம் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். தெரிந்திருந்தும் மக்களுக்குக் காட்டாப்புக் காட்டுவதற்காகவும் பேரறிக்கை ஒன்று விடுவதற்காகவும் பேசினார்கள். பேசுகின்றார்கள். 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பான தீர்வு எட்டப்படும். அது தொடர்பாகப் பேசுவோம் என வடக்கு மாகாணத் தமிழ் கட்சிகளை மாத்திரம் அழைத்தார்.

கிழக்கை மறந்து விட்டார். பின்னர் ஒருவாறு இணைத்துக் கொள்ளப்பட்டனர். முதலாவது சந்திப்பில் 13 வது திருத்தத்தை முழுதாக அமுல்படுத்தப் போவதாகச் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பது போல் 2017 இல் (நல்லாட்சிக் காலத்தில் இருந்து) இருந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகச் செயற்படாதிருக்கும் மாகாண சபைகளுக்கான 13 எனும் சங்கை ஊதி பேரினவாதிகளையும் மதவாதிகளையும் தூ ண்டிவிட்டு 13 எரிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்தார்.

அரசியல் யாப்பினை எரிப்பது பாரதூரமான குற்றம். இருந்தும் எரித்தவர்களுக்கு இன்றுவரை தண்டனை வழங்கப்படவில்லை. அதிலும் 13 இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கை. இருந்தும் எரித்துவிட்டனர். இந்திய அரசும் கண்டும் காணாமல் இருந்தது. இதுவும் அரசியலில் இதெல்லாம் சகசமப்பா என்பதுபோல் நடந்துவிட்டது.

இந்திய அரசைப் பொறுததவரை இலங்கைத் தமிழ் மக்கள், தமிழ் அரசியல்வபதிகளைத் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்துவார்கள். தமது புவிசார் அரசியல், பிராந்திய பாதுகாப்புக்குப் பாதகம் ஏற்படும் போது மாத்திரமே தமிழ் மக்களையும் தமிழ் அரசியல்வாதிகளையும் பயன்படுத்துகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான ஆளுனர்கள் இருவரும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் ஆலோசனைக்கு இணங்கவே தமிழர்கள் ஆளுனர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இதற்கு இந்தியாவின் புவிசார் அரசியல் நலனே பிரதான காரணியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நியமனத்திற்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் காணிகள், சொத்துக்கள், வளங்கள் ஆகியன (குறிப்பாக திருகோணமலைத் துறைமுகம், எண்ணெயக் குதங்கள், விமான நிலையங்கள், தீவுகள்) சீனாவின் கைவசமாவது தமது புவிசார் அரசியல் நலன்களுக்குப் பாதகமாகிவிடும் என்பதனால் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதில் பெருமைப்படுவதற்கு ஒனறுமில்லை. இலங்கை இந்தியாவுடன் சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்தால் இலங்கைத் தமிழர் விவகாரம் இந்தியாவைப் பொறுத்தவரை பத்தோடு பதினொன்றாகத்தான் இருக்கும். இதுவும் தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தெரியும். இருந்தும் இந்தியாவைக் காரணம் காட்டி மக்களை ஏமாற்றுவதற்கு இந்தியா தேவைப்படுகிறது.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என வரிந்து கட்டிக் கொண்டு இருப்பவர்களிடம் இருந்து பூகோள அரசியலுக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்குச் சாதகமான எந்த ஒரு தீர்வினையும் பெற்றுத் தருவதற்கு எந்தவொரு நாடும் முன்வராது என்பதையும் தமிழ் தரப்பினர் புரிந்த கொள்ள வேண்டும்.

2009 இல் இறுதி யுத்தத்தை நடாத்தி முடிப்பதற்குக் காரணமான இந்தியா 13 சீர்திருத்தம் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும்வரை பார்த்துக் கொண்டிருந்தது. இத்தகைய நிலையில் தமிழ்நாட்டு மாநில அரசுக்கு மேலதிகமாக சமஷ்டியைப் பெற்றுத் தரப் போகின்றதா.

தமிழரின் நிலை 'இலவு காத்த கிளியின் நிலை டீபால்' ஆகிவிட்டது. ரனிலுடன் பேசுவது, இந்தியாவை எதிர்பார்ப்பது தொடர்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்திருக்கும் நிலைப்பாடு பொருத்தமானது என எண்ணத் தோன்றுகிறது.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என வரிந்து கட்டிக் கொண்டு இருப்பவர்களிடம் இருந்து பூகோள அரசியலுக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்குச் சாதகமான எந்த ஒரு தீர்வையும் பெற்றுத் தருவதற்கு எந்த நாடும் முன்வராது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இறுதி யுத்தத்தின் போது எற்பட்ட மனித உரிமை மீறல்கள், யுத்த மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துதல், தண்டனை வழங்குதல், பொறுப்புக் கூறல், நிவாரணம் வழங்குதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தினால் எடுக்கப்பட்ட மிகக் கடுமையான தீர்மானங்களில் இலங்கை அரசுக்குச் சார்பாகப் பல திருத்தங்களை மேற்கொண்டு, இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்ததும் இந்திய அரசுதான்.

இந்திய அரசு நினைத்திருந்தால் இலங்கைத் தமிழர் பிரச்சினை, தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கலாம். இவற்றை வைத்துக் கொண்டு எல்லோரும் அரசியல் நடத்துகின்றனர்.

அரசியல்வாதிகளுக்கு நாட்டு மக்களிடத்தில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அதேபோல் வைத்தியர்களுக்கு நாட்டு மக்கள் எல்லோரும் நோயாளிகளாக இருக்க வேண்டும். அப்போதுதான் இலாபம் சம்பாதிக்கலாம். தமது பக்கப் பண நிலுவையும் அதிகரிக்கும்.

இலங்கை அரசியல்வாதிகள் பலரைப் பொறுத்தவரை அவர்களுக்கு நிலையான கொள்கை என்பதில்லை. பல கட்சிகளும் அதேபோல்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் ஊழல், மோசடி, கட்சி தாவுதல், பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்களின் போது தமது கட்சியைப் புறக்கணித்து வாக்களித்தல். நாடு, மக்கள் நலன் சாராமல் கொண்டு வரப்படும் தீர்மானங்கள், சட்டங்கள், யாப்புத் திருத்தங்கள், மசோதாக்கள் ஆகியவற்றுக்கு ஆதரவாக வாக்களித்தல், வாக்களிப்பில் கலந்து கொள்ளாது பின்கதவால் வெளியேறுதல் ஆகியவற்றைச் செய்து பச்சொந்திகள் போல் செயற்படுகின்றனர்.

அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை. நிரந்தரப் பகையளியுமில்லை என்பதுபோல நடந்து கொள்வார்கள். நாட்டுக்குப் பாதகமான 18, 20 யாப்புத் திருத்தங்களுக்கு அரசின் சலுகைகள், வரப்பிரசாதங்கள், பணம், பதவி, சுகபோகம் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு தீர்மானத்ர்க்கு ஆதரவாகப் பல எதிரணி உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

நல்லாட்சிக் காலத்தில் குறுந்தூர்மலை, வெடுக்குநாரி மலை, கன்னியா வென்னீரூற்றுப் பிரதேசங்களில் தொல்பொருளியல் திணைக்களத்தின் காணி அபகரிப்புத் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேசித் தீர்வு காண்பதற்கு அப்போதைய இனவிவகார, நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் ஏற்பாடு செய்திருந்தார்.

அதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். அந்தப் பேச்சுவார்த்தைக்குத் தமிழ தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாததனால் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் வடக்கு, கிழக்குத் தமிழ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாமையினால் பேச்சுவார்த்தை இடையில் நிறுத்தப்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பாக 'யார் குற்றியும் அரிசாகினால்' போதும் என்பது போல் பிரச்சினையை யார் முன்னின்று தீர்த்தால் என்ன மக்களின் பிரச்சினை தீர்ந்தால் போதும் என்பதை மறந்து, அப்பிரச்சினையைத் தீர்த்து வைத்த பேரும் புகழும் மனோ கணேசனைச் சென்றுவிடக்கூடாது என்பதில் குறியாக இருந்து அப்பேச்சுவார்த்தையைப் பகிஷ்கரித்தனர்.

இந்த விடயத்தை தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் மனோ கணேசனே குறிப்பிட்டிருந்தார். இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தமது பக்க நியாயங்களை முன்வைத்திருநதால் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல பூதாகரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கணடிருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டதையும் மறந்து இப்போது விரவசனம் பேசி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர். இதுவும் அரசியலில் சகசம் என்பதுபோல் எண்ணத் தோன்றுகிறது.

தற்போது அரசியல், பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலையேற்றம், தொழில் இழப்பு, அதிகரித்த வாழ்க்கைச் செலவு காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இதற்குக் காரணமான அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும் இன்றுவரை தணடிக்கப்படாமலே இலுக்கின்றனர்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு, நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் எதுவித தண்டனையும் பெறாமல் இன்றும் மக்கள் மத்தியில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இதுபற்றி விசாரித்தால் 'அரசியலில் இதெல்லாம் சகசமப்பா' எனக் கூறி நழுவிச் செல்கின்றனர். இப்படிப்பட்ட அரசியல்வாதிகளுக்கு மக்கள்தான் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும்.


# ஜாமிஆ நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு விழாவும்



Golden Jubilee
Since 1973

JAMIAH NALEEMIAH

50 Years of Excellence in
Islamic Studies & Human Sciences



























**(அஸ்ரப் ஏ. சமட்)**

ஜாமிஆ நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு விழாவும் நேற்று (24) கொழும்பு பண்டாரநாயக்க சர்வேதச மாநாட்டு மண்டபத்தில் கலாபீடத்தின் தலைவர் யாக்கூத் நளீம் தலைமையில் முதலவர் அஸ்ஸெய்க் ஏ.எசி.அஹார் முஹம்மத் மற்றும் இஸ்லாமிய கற்கை நெறியின் தலைவர் அஸ்ஸெய்க் பளீல் ஆகியோரின் வழிநடத்தலில் சிறப்பாக இடம் பெற்றது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா மற்றும் கௌரவ அதிதகளாக அமைச்சர் விதுர விகரமநாயக்க இ பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்ஜித் பண்டார, ரவுப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், காதர் மஸ்தான், இம்ரான் மஹ்றூப், ஏ.எச். எம்.பௌசி, மற்றும் ராஜதந்திரிகள்இ வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் கே.டி.ரேணுக சில்வா சர்வமத தலைவர்கள்இ மர்ஹூம் நளீம் ஹாஜியாரின் குடும்ப உறுப்பினர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள், அரச அதிகாரிகள், தனவந்தர்கள் நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# யுனிலீவரின் ஈ-வர்த்தக தளம் விரிவாக்கம்




யூனிலீவர் ஸ்ரீலங்கா தனது உத்தியோகபூர்வ இ-வர்த்தகத் தளமான uStore.lk I CBL குழுமத்துடன் மூலோபாய பங்காளித்துவத்தின் மூலம் வளப்படுத்துவதில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது,

இது வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் தயாரிப்புகளின் வீச்சை மேலும் விரிவுபடுத்துகிறது. UStore.lk இன் தொடர் தயாரிப்புப் பட்டியல் விரிவாக்கத்தின் முதல் படியான இந்த நடவடிக்கையானது, இலங்கையில் FMCG கொள்வனவு அனுபவத்தை மிகவும் வசதியாக மாற்றுவதற்கு இலங்கையின் இ-வர்த்தக எல்லையை முன்னோக்கி நகர்த்துவதில் யுனிலீவர் ஸ்ரீலங்காவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பறைசாற்றுகின்றது.

2019 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்ட uStore.lk, நாட்டிலுள்ள நுகர்வோர்களின் விருப்பமான ஒரு கொள்வனவுத் தளமாகக் கணிசமான வரவேற்பைப் பெற்றுள்ளது, ஏனெனில் இது அவர்களின் வீடுகளின் பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் வசதி ஆகியவற்றிற்கேற்ப பொருட்களை நேரடியாக வாங்கும் வசதியை வழங்குகிறது.

தின்பண்டங்கள், மசாலாப் பொருட்கள், பருப்பு வகைகள், தேங்காய் பால் மற்றும் தானியங்கள் உட்பட புகழ்பெற்ற 7 CBL குழும வர்த்தகச் சின்னங்களின் 80 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளைச் சேர்ப்பதன் மூலம், uStore.lk கொள்வனவாளர்கள் இப்போது 300 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை நாட்டின் எந்தப் பகுதிக்கும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய காலத்தில் நிகழ்நிலையில் கொள்வனவு செய்பவர் முன்னெப்போதையும் விட அதிக அனுபவமும் அறிவும் கொண்டவர், பல்வேறு வகைகளிலும் பல்வேறு ஊடகங்களிலும் தங்கள் தேவைகள், உந்துதல்கள் மற்றும் சந்தர்ப்பங்களைப் பொறுத்துக் கொள்வனவு செய்கின்றார்.



# MDRT வெற்றியாளர்கள் கௌரவிப்பு

Janashakthi Life இலங்கை காப்புறுதித் துறையில் முதன்மையான ஒரு காப்புறுதி நிறுவனமாகும். இது அண்மையில் கொழும்பு மரினோ ஹோட்டலில்'Road to MDRT 2023' என்ற சிறப்பு அறிமுக நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் அந்நிறுவனத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டுத்துறையினால் நிகழ்த்தப்பட்ட ஒரு விரிவான பயிற்சித்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. செயல்திறனை மேம்படுத்தும் கருவிகள், முறைகள் மற்றும் நுட்பங்கள் இங்கே முக்கிய இடத்தை வகித்தன. மேலும் இந்நிழ்வில் நிறுவனத்தில் சிறந்த செயற்திறன் கொண்டவர்கள் அங்கீகரித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனசக்தி குழுமத்தின் நிறுவனரும், தலைவருமான திரு. சந்திரா ஷாஃப்டர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மேலும், MDRT (MILLION DOLLAR ROUND TABLE) வெற்றியாளர்களுடன், ஜனசக்தி லைஃப் இன் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின் காப்புறுதித் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கை ஆற்றிய C.T.A.. ஷாஃப்டர், தமது உரையின் மூலம் பல தசாப்தங்களாக நீடித்த அவரது புகழ்பெற்ற தொழில்சார் வாழ்க்கை அனுபவங்களையும் அறிவுரைகளையும் பகிர்ந்துகொண்டார்.




# பிளாஸ்டிக் மாசுபடுதலை கட்டுப்படுத்த 'Eko Wave'

2023 ஆம் ஆண்டின், உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, Coca-Cola அறக்கட்டளை, Eco-Spindles மற்றும் Janathakshan (GTE) ஆகியன இணைந்து, கொழும்பில் மேம்பட்ட கழிவுகளை முன் பதப்படுத்தும் மையங்களை (MRF) 'Eko Wave' திறந்து வைத்தது. இந்நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் பத்திரகே கலந்துகொண்டார்.

"பிளாஸ்டிக் மாசுபடுதலுக்கான தீர்வுகள்" (Solutions to Plastic Pollution) என்ற உலக சுற்றுச்சூழல் தினத்திற்கான ஐக்கிய நாடுகளின் தொனிப்பொருளுக்கு ஏற்ப தீர்க்கமான நடவடிக்கையை எடுத்து, கொழும்பில் உள்ள Eko Wave ஆசுகு சுற்றுச்சூழல் பேண்தகைமையான உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது

உள்ளூர் பிளாஸ்டிக் கழிவு பிரச்சினைகளுக்கு வலுவான தீர்வை வழங்குகிறது. பிராந்தியத்தில் நிலவும் பிளாஸ்டிக்-கழிவு நிர்வகிப்பு சவால்களுக்கு ஒரு விரிவான தீர்வாக, ஆசுகு திறமையான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கமான கழிவு செயலாக்க செயல்முறைகளைப் பயன்படுத்துகிறது, பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு ஒரு பாராட்டத்தக்க முன்மாதிரியாக இது அமைகிறது.



# Trans Asia Cellular துபாயில் ..!!

இலங்கையின் முன்னணி மொபைல் தொலைபேசி உதிரிப்பாகங்கள் மற்றும் தொலைத்தொடர்பாடல் பாகங்கள் வழங்குநரான Trans Asia Cellular (Pvt) Ltd. தனது முதலாவது சர்வதேச விற்பனை நிலையத்தை துபாய் நகரில் ஆரம்பித்துள்ளது. வர்த்தக நாமத்தின் சர்வதேச விரிவாக்கல் திட்டங்களின் முதல் அங்கமாக இந்த நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

துபாய் நகரின் மையப்பகுதியில் டெய்ராவில் அமைந்துள்ள இந்த நிலையத்தை, மே மாதம் 29 ஆம் திகதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஷேக் மொஹமட் அல் ஷெஹி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் குழுமத்தின் தவிசாளர் முஃபீல் யசீன் கலந்து கொண்டதுடன், இதர முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர்.

1994 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல், கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில், Trans Asia Cellular, அசல், உயர் தரம் வாய்ந்த மொபைல் தொலைபேசி மற்றும் தொடர்பாடல் சாதனங்களை சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன் வழங்குவதில் கீர்த்தி நாமத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச தொழிற்துறை நியமங்களின் பிரகாரம், தனது தயாரிப்பு தெரிவுகளையும் விரிவாக்கம் செய்த வண்ணமுள்ளது. தனது புதிய சர்வதேச நிலையத்துக்கு மேலதிகமாக, கொழும்பு மற்றும் குருநாகல் நகரங்களில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளதுடன், முழுமையாக செயற்படும் ஒன்லைன் சந்தைப்பகுதியையும் கொண்டுள்ளது.

வர்த்தக சுடர்


# ஒப்பற்ற ஷொப்பிங் அனுபவம் Havelock City Mall




இலங்கையின் புத்தம் புதிய நவீனத்துவம்மிகு வர்த்தக புகலிடமாக திகழ உள்ள Havelock City Mall 2023 ஆகஸ்ட் இல் அதன் கதவுகளைத் திறக்கும்போது திகைப்பில் மூழ்கிட தயாராகுங்கள். கொழும்பின் மைய பகுதியில், உலகத் தரம் வாய்ந்த ஷொப்பிங் அனுபவம் உங்களை உற்சாகத்தில் திணறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஹேவ்லொக் சிட்டியின் நுழைவாயிலில் அமைந்துள்ள இந்த மோல் இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் புதுமையான விடயங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கலப்பு-பயன்பாட்டு திட்டமாகும், இது உலக வர்த்தக மையத்தின் உரிமையாளர், முகாமையாளர் மற்றும் மேம்பாட்டாளரான ஓவர்சீஸ் ரியாலிட்டி (சிலோன்) பிஎல்சியால் உருவாக்கப்பட்டுள்ளது.

# 43 By The Sea அறிமுகம்



மரைன் டிரைவ் பிரதேசத்தில் Prime Group இன் 43 By The Sea தொடர்மனை அறிமுகத்துடன், கொழும்பில் அதிகளவு விரும்பப்படும் புதிய முகவரி தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நகரின் மையத்தில் அமைதியான மற்றும் நகர புற வாழ்க்கையை குடியிருப்பாளர்களுக்கு வழங்கும் வகையில் Prime Group இனால் சொகுசு தொடர்மனைத் தொகுதியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் நம்பிக்கையை வென்ற முன்னணி சொத்து வடிவமைப்பாளரான Prime Residencies PLC இனால் இந்த தொடர்மனை வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தொடர்ச்சியாக LMD சஞ்சிகையினால் நன்மதிப்பை வென்ற றியல் எஸ்டேட் நிறுவனம் என பல விருதுகளால் கௌரவிக்கப்பட்ட நிறுவனமாக இது திகழ்கின்றது.

கொழும்பின் புகழ்பெற்ற மரைன் டிரைவ் பகுதியில் நிர்மாணிக்கப்படும் 43 By The Sea இனால், குடியிருப்பாளர்களுக்கு சமுத்திரத்தின் சிறந்த காட்சியமைப்பு வழங்கப்படுகின்றது. நெரிசல் மிகுந்த நகர வாழ்க்கையிலிருந்து சற்று மாறுபட்ட அமைதியான வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடிய வகையில் இந்த தொடர்மனை அமைந்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் வளர்ந்தவர்களுக்கான பெரிய நீச்சல் தடாகம், 24 மணி நேர பாதுகாப்பு, பிரவேசம் கட்டுப்படுத்தப்பட்ட நுழைவாயில்கள், ஜிம், விருந்தினர் வரவேற்பு பகுதி மற்றும் லோஞ்ச், சிறுவர் விளையாட்டு பகுதி, மொட்டைமாடி டெரஸ் மற்றும் ஸ்கை லோஞ்ச் ஆகிய வசதிகளையும் கொண்டுள்ளது.

43 By The Sea இன் விசேட அம்சங்களாக, அதன் அமைவிடம் மற்றும் குடியிருப்பாளரால் இலகுவில் அனைத்து பகுதிகளையும் சென்றடையக்கூடிய வசதி போன்றவற்றை குறிப்பிடலாம். வசிப்பிடத்திலிருந்து பத்து நிமிடங்களினுள் அனைத்து பகுதிகளுக்கும் செல்லமுடியும்.

சுப்பர் மார்கெட்கள், உணவகங்கள், புகையிரத நிலையம், பேருந்து தரிப்பிடம், வங்கிகள், பாடசாலைகள் மற்றும் வழிபாட்டிடங்கள் என அனைத்தும் அருகாமையில் காணப்படுகின்றன. கொழும்பின் விறுவிறுப்பான இரவு நேர பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பகுதியிலிருந்து சில நிமிடங்களில் பயணிக்கக்கூடிய தூரத்தில் இந்தத் தொடர்மனை அமைந்துள்ளது.

200,000 சதுர அடிக்கு மேல் பரந்து விரிந்து கிடக்கும் ஹேவ்லொக் சிட்டி மோல் ஓர் சொர்க்கமாகும், இதில் ODEL, Cargills Food Hall, Scope Cinema, Food Studio, Cool Planet, மற்றும் Abans உள்ளிட்ட ஆறு முதன்மையான வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன.

அதற்கு மேலதிகமாக, 132 விற்பனை நிலையங்கள், ஃபேஷன் அணிகலன்கள், பொழுதுபோக்குகள், உணவு மற்றும் பானங்கள், வசதியான சேவைகள், மின்னியல், வீட்டுப்பொருட்களுடன் இணையற்ற தெரிவுகளையும் வழங்குகின்றன.

பல்வகையான உணவு வகைகளை சுவை பார்த்திட நினைக்கும் உணவு பிரியர்களுக்கு, ஹேவ்லொக் சிட்டி மோலில் உள்ள விருப்பத் தெரிவுகள் சுவை அனுபவத்தினை அள்ளி வழங்கிடும்.

30 இற்கும் மேற்பட்ட சிறப்பு உணவகங்கள், வசதியான கஃபேக்கள் மற்றும் ஸ்போர்ட்ஸ் பார்கள் ஆகியவற்றின் வரிசையால் திறமையாக வடிவமைக்கப்பட்டுள்ள உலகளாவிய உணவு வகைகளையும் நமது நாட்டு பாரம்பரிய உணவுகளையும் ஒன்றிணைக்கும் ஃபுட் கோட் (food Court) வழியாக உங்களின் சுவை பயணத்தை தொடங்கிட முடியும்.




# 1990 சுவ செரிய அம்புலன்ஸை பொறுப்பேற்றுள்ள அமானா

அமானா வங்கி, இலங்கை மக்களுக்கு ஆதரவளிப்பதற்கான தனது அர்ப்பணிப்பின் அங்கமாக, தேசிய தேவையை கவனத்தில் கொண்டு, 1990 சுவ செரிய அம்புலன்ஸ் ஒன்றைப் பொறுப்பேற்றுள்ளது. இதனூடாக வங்கியின் மக்களுக்கு நட்பான வங்கியியல் செயற்பாடுகள் மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1990 சுவ செரிய சேவை, நாடு முழுவதிலும் இலவசமாக அனைத்து இலங்கையர்களுக்கும் வைத்தியசாலை அனுமதிக்கு முன்னரான அவசர சேவையாக வழங்கப்படுகின்றது. எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றும் இச் சேவையின் சராசரி சேவை வழங்கல் நேரம் 11.30 நிமிடங்களாக அமைந்துள்ளது.

இது தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்களின் வாழ்க்கைக்கு வளமூட்டி கைகொடுப்பது எனும் எமது ஈடுபாட்டின் அடிப்படையில், அனைத்து இலங்கையர்களுக்கும் அர்த்தமுள்ள வகையிலமைந்த செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க அமானா வங்கியைச் சேர்ந்த நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

தரமான சுகாதார பராமரிப்பை பெற்றுக்கொள்வது என்பது அடிப்படை உரிமை என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். உயிர்களைக் காப்பதுடன், தேவையானவர்களுக்கு நிவாரணமளிக்கும் செயற்திட்டத்துக்கு அனுசரணையளிப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

1990 சுவ செரிய அம்புலன்ஸ் சேவை என்பது, முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவ பராமரிப்பு வளமாக அமைந்துள்ளதுடன், அதன் வினைத்திறனான செயன்முறைகளின் காரணமாக பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் கோரிக்கைக்கு நாம் செவிமடுத்துள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் இலவசமாக வைத்தியசாலை அனுமதிக்கு முன்னரான மருத்துவப் பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்றோம்." என்றார்.

# P&S வலையமைப்பு 200 இடங்களுக்கு

இலங்கையரின் விருப்பமான துரித-உணவு வழங்கும் உணவக சங்கிலியான Perera and Sons Bakers (Private) Limited (P&S) அதன் நீண்டகால வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லை சமீபத்தில் எட்டியது. இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ள P&S ஆனது, தனது 200வது விற்பனை நிலையத்தை நுவரெலியவில் அண்மையில் திறந்து வைத்தது. நுவரெலிய கண்களுக்குள் குளிர்ச்சியான அழகிய மலைப்பிரதேசங்களுக்கு பெயர் பெற்ற அழகிய மலைப்பிரதேசமாகும்.

இந்த விற்பனை நிலையத்தை திறந்ததன் மூலம், இலங்கையில் 200 இடங்களை உள்ளடக்கியதாக அதன் வலையமைப்பை விரிவுபடுத்திய முதல் மற்றும் ஒரே துரித உணவு வழங்கும் உணவக சங்கிலியாகும்.

1902 இல் ஸ்தாபிக்கப்பட்ட P&S ஆனது, 120 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. பல ஆண்டுகாலமாக மக்களின் அபிமானத்தை வென்ற P&S, இப்போது ஒவ்வொரு இலங்கையரும் உச்சரிக்கும் பெயராக மாறியுள்ளது.

இன்று மில்லியன் கணக்கான இலங்கையர்களுக்கு சுவையான மற்றும் தரமான உணவுத் தயாரிப்புகளை வழங்கி வருகிறது. 200வது விற்பனை நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவத்தை மேலும் சிறப்பாக்குவதற்கு P&S உணவாக சங்கிலியின் முக்கிய பங்குதாரர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




# ஏற்றுமதியில் சர்வதேச இருப்பை உறுதி செய்யும் Alumex



உயர்தர அலுமினியத்தின் முன்னணி உற்பத்தியாளரும், உயலடநலள குழுமத்தின் துணை நிறுவனமான யுடரஅநஒ"டூஊ, அதன் மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகளை விரிவுபடுத்துவதற்கும், தொழில்துறையில் முன்னணி ஏற்றுமதியாளராக தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், யுடரஅநஒ"டூஊ உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தையை தொடர்ச்சியான புத்தாக்கங்களுடன் தனதாக்கிக்கொள்ளும். உற்பத்தியாளர் இப்போது உள்ளூர் சந்தைக்கு புத்தாக்கமான புதிய னுஐலு (னுழ வை லழரசளநடக) தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறார். புதிய வரம்பு, பரந்த அளவிலான தயாரிப்புகளை உள்ளடக்கியது, சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் மற்றும் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு தனித்துவமான புத்தாக்கமான தீர்வுகளை வழங்கும்.

சபுகஸ்கந்தையில் உள்ள அதிநவீன அலுமினியம் உருக்கும் ஆலையில் முதலீடு செய்த பிறகு, யுடரஅநஒ அதன் குறைந்த கார்பன் அலுமினிய வரம்பான "முணழஏ" மற்றும் சுந"யுஜ ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் கட்டுமானத் துறையில் நிலையான புத்தாக்கங்களை மேலும் ஊக்குவிக்கிறது.

"கடந்த இரண்டு வருடங்கள் நம் அனைவருக்கும் சவாலானவை. எவ்வாறாயினும், சவால்களை சமாளிக்கக் கூடிய திறன் எங்களின் ஏற்றுமதியை விரிவுபடுத்தவும், அதிக ஏற்றுமதி வருவாயை உருவாக்கவும் மற்றும் எங்கள் தொழில் பங்குதாரர்களைக் கவனித்துக்கொள்ளவும் உதவுகிறது, இது எங்களது முக்கிய தூரநோக்கு பார்வையாகும்." என யுடரஅநஒ முகாமைத்துவ பணிப்பாளர் பிரமுக் தெதிவெல தெரிவித்தார்.